# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE , VALANGAIMAN.

Calender
Miscellaneous
Preliminary Register     Case No. **CC 15/20**
Sessions

Deposition of witness for     Prosecution PW-4 (LW- 2 )
Defence
Court

Name     Jeyakumar

Father/Husband Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **03.12.2021**

**முதல் விசாரணை**

நான் தற்போது மணல்மேடு காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணி செய்கிறேன். கடந்த 2018ம் ஆண்டு வலங்கைமான் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்தேன். அப்போது கடந்த 25.08.2018 அன்று இரவு 07.15 மணியளவில் வலங்கைமான் கடைத்தெருவில் நான் போக்குவரத்து ஒழுங்கு பணியில் ஈடுபட்டிருந்தேன். அப்போது வலங்கைமான் காவல் நிலையத்திலிருந்து எழுத்தர் ஆனந்தன் என்பவர் போன் மூலம் வலங்கைமான் பெண்கள் அரசு மேல்நிலை பள்ளி அருகே செயின் பறிப்பு சம்பவம் நடந்ததாக கூறினார். நான் உடனே சம்பவயிடம் சென்றேன். அப்போது கூட்டமாக இருந்தது. அப்போது கூட்டத்தில் இருந்த ஒரு பெண்மணி செயினை அறுத்துக் கொண்டு நீடாமங்கலம் பக்கம் இரண்டு நபர்கள் பல்சர் இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், அவர்களை துரத்திக் கொண்டு அரித்துவாரமங்கலம் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர் அறிவழகன் என்பவர் சென்றதாக கூறினார்கள். நானும் நீடாமங்கலம் பக்கம் செல்லலாம் என்று நினைத்த போது சம்பவயிடத்திலிருந்த காவலர் அறிவழகனின் தம்பிக்கு அறிவழகன் போன் செய்து

மேற்படி செயின் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் அரித்துவாரமங்கலம் பாலம் அருகே சென்ற போது அவர்கள் சென்ற இருச்சக்கர வாகனத்தில் லைட் வெளிச்சம் நின்றுவிட்டது என்றும், நான் அவர்களுக்கு பின்னே நின்றுவிட்டேன் என்றும், மேலும் சற்று நேரத்திற்கு பின்பு மேற்படி இருச்சக்கர வாகனம் ஹெட் லைட் போடாமல் வந்ததாகவும், அவர்களை தடுத்து நிறுத்தி நான் விசாரித்தேன், அவர்கள் என்னை தள்ளிவிட்டு வலங்கைமான் பக்கம் வருகிறார்கள் என்றும், அவர்களை தடுத்து நிறுத்தங்கள் என்றும் கூறியதாக அவரின் தம்பி கூறினார். நான் எனது இருச்சக்கர வாகனத்தில் நீடாமங்கலம் பக்கம் சென்றேன். வலங்கைமான் மகளிர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து 100 மீட்டர் தூரம் அளவு நான் சென்ற போது எதிர் திசையில் இருந்து அறிவழகன் இருச்சக்கர வாகனத்தில் பிடிங்க பிடிங்க என்று சத்தம் போட்டுக்கொண்டே வந்தார். அப்போது என்னை கடந்து எதிர் திசையில் இருந்து ஒரு பஜாஜ் பல்சர் இருச்சக்கர வாகனம் வேகமாக வந்தது. அதில் இரண்டு பேர் இருந்தனர். நானும், அறிவழகன் பின்னாலேயே வலங்கைமான் பக்கம் வந்தேன். வலங்கைமான் சிட்டி மளிகை அருகே மேற்படி பஜாஜ் பல்சர் வாகனத்தில் வந்த இருவரையும் அங்கிருந்த பொது மக்களும், காவலர் அறிவழகனும் பிடித்துவிட்டனர். நான் எனது வண்டியை நிறுத்திவிட்டு வந்து பார்த்த போது அறிவழகன் தலையில் இரத்தத்துடன் நின்று கொண்டிருந்தார். அப்போது அறிவழகன் கூட்டத்தில் யாரோ தன்னை அடித்துவிட்டதாக கூறினார். அறிவழகனை அருகிலிருந்தவர்கள் வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் அறிவழகன் மற்றும் பொதுமக்களால் பிடித்து வைக்கப்பட்டிருந்து ஆஜர் எதிரிகள் இருவரையும் காவல் நிலையத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அழைத்து சென்றேன். அறிவழகன் வலங்கைமான் அரசு மருத்துவமனையிலிருந்து கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றிருந்தனர். நடந்த சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

எதரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE , VALANGAIMAN.

Calender
Miscellaneous
Preliminary Register — Case No. **CC 15/20**
Sessions

Deposition of witness for — Prosecution PW-5 (LW- )
Defence
Court

Name — Mani

Father/Husband Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **03.12.2021**

**முதல் விசாரணை**

நான் கீழ நல்லம்பூரில் குடியிருக்கிறேன். நான் வலங்கைமான் கடைத்தெருவில் டீக்கடை வைத்து தொழில் செய்து வந்தேன். அ.சா.1ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இன்றிலிருந்து சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 7.00 மணியளவில் நானும் என் மனைவியும் வலங்கைமான் கடைத்தெருவில் இருந்த மருந்து கடையில் மருந்து வாங்கி கொண்டிருந்தோம். அப்போது அய்யோ மண்டை உடைந்துவிட்டது என்று சத்தம் கேட்டது. நான் ஓடி வந்து பார்த்த போது 15 அடி தூரத்தில் அறிவழகன் மண்டை உடைந்து இரத்தக்காயத்துடன் இருந்தார். அங்கிருந்த 2 நபர்கள் சத்தம் போட்டுவிட்டு சென்றார்கள். மேற்படி அறிவழகனுக்கு காயம் எப்படி ஏற்பட்டது என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி பகுதியாக பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் கடந்த 25.07.2018 அன்று இரவு 07.15 மணியளவில் நான் வலங்கைமான் மருந்து கடை அருகில் நின்று கொண்டிருந்த போது செயின் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்ட ஆஜர் எதிரிகள் இருவரையும் அ.சா.1 துரத்திக் கொண்டுவந்து கடைத்தெருவில் பிடித்தபோது அவர்கள் வைத்திருந்த இரும்பு ராடால் அறிவழகனை தலையில் அடித்ததாகவும், அதில் அவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், மேலும் அவருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும், சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

எதரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.